**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி மாதம் 18 -ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 02 ம் நாள் வியாழக்கிழமை

CNR:NO.TNNGO3-000003-2026

**அசல் வழக்கு எண்.33/2026**

1. மீனாட்சி
2. அங்காளம்மன்
3. ஆனந்தவள்ளி ..............வாதிகள்

-எதிர்-

முத்துக்கண்ணன் ......................பிரதிவாதி

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 19.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஆல்பர்ட்ராயன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி நீதிமன்றம் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...........................

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 3/4 வீதம் உள்ளதென ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து நில அளவையர் மூலமாக தாவா சொத்துக்களை அளந்து நளஇளப்பம் சரிக்கட்டி அதற்குரிய அறிக்கையை பெற்று இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கிட கோரியும், வாதிகளுக்கு பிரதிவாதி வழக்கின்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:19:18 +0530

செலவுத் தொகையை வழங்க கோரியும், இதர பரிகாரங்கள் வழங்க கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## I. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

1, 2 வாதிகள் ஒரே வீட்டிலும், 3ம் வாதி அவரது கணவருடன் மற்றொரு வீட்டிலும் திருப்பூண்டி(கி) காமேஸ்வரம் சிவன்கோவில்தெரு முகவரியில் வசித்து வருகிறார்கள் என்றும், 1ம் வாதி, 2, 3 வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தாயார் என்றும், 1ம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தகப்பனாருமான ராஜமாணிக்கம் தாவா சொத்தினை கடந்த 17.05.1977 அன்று பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணத்தின் மூலமாக பழைய சர்வே எண்.206/8-க்கு கட்டுப்பட்ட புஞ்சை 0.84 செண்ட் அல்லது 252 குழி இடத்தை முழுவதுமாக கிரயம் பெற்று அதுமுதல் அவரது சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் வைத்து ஆண்டனுபவம் செய்து வந்து பிறகு இறந்துவிட்டார் என்றும், வாதிகளுக்கு போதிய உலகறிவும், படிப்பறிவும் இல்லாத காரணத்தினால் இறந்துபோன இராஜமாணிக்கத்துடைய இறப்பு சான்று பெறப்படவில்லை என்றும், வாதிகள் மற்றும் பிரதிவாதி தாவா சொத்தில் தனித்தனியாக வீடு கட்டி இதுநாள்வரை குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், வாதிகள் மற்றும் பிரதிவாதி இராஜமாணிக்கத்தின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்றும், 2, 3 வாதிகள் இருவரும் வாய்பேச இயலாத காது கேட்காத மாற்று திறனாளிகள் என்றும், 3ம் வாதி அவருக்குரிய பாகவீதத்தில் பயிர் சாகுபடி செய்வதற்கு விருப்பம் கொண்டு அதனை பிரித்து தர 1, 2 வாதிகள் மற்றும் பிரதிவாதியிடம் கோரிக்கை வைத்தபோது அவர்கள் மூவரும் செவி சாய்க்காமல் புறக்கணித்து வந்துள்ளனர் என்றும், இந்நிலையில் மேற்படி புல எண்.206/8-ஆனது 206/8 ஏ மற்றும் 2068 பி1 என வருவாய்துறையினரால் உட்பிரிவுகள் செய்யப்பட்டு அதற்கு இராஜமாணிக்கத்தின் வாரிசுகள் மற்றும் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.2484 என்ற கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அதில் 84 செண்ட்டிற்கு 252

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:19:25 +0530

குழி என இல்லாமல் அதற்கும் குறைவாக 0.28.50 ஏர்ஸ் அதாவது 213.28 குழி என தவறாக குறைத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனை திருத்தம் செய்வதற்கு வாதிகள் மூவரும் உரிய நடவடிக்கை மேற்கொண்டபோதுதான் மேற்சொன்ன இடம் போக மீதமுள்ள இடத்திற்கு சர்வே எண்.206/8 பி2 க்கு உட்பிரிவு செய்யப்பட்டு இறந்துபோன இராஜமாணிக்கம் பெயரிலேயே பட்டா எண்.327 வழங்கப்பட்டுள்ளது தெரியவந்தது என்றும், பிரதிவாதி, 1, 2 வாதிகளின் துணையுடன் உண்மைக்கு புறம்பான தகவல்களை சொல்லி வழக்கறிஞர் மூலம் கடந்த 15.04.2025 தேதியிட்டு 3 ம் வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், கடந்த 2025 ஆகஸ்ட் மாதம் தாவா சொத்தின் ஒரு பகுதியில் 3 ம் வாதி கூரைவீட்டினை கட்டியபோது அதை முடியும் தருவாயில் கட்டவிடாமல் பிரச்சினை செய்து அவரையும், அவரது கணவரைகளையும் பிரதிவாதி தரப்பை சேர்ந்த நபரும் தாக்கியதால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்க கீழையூர் காவல் நிலையத்தில் 3 ம் வாதி கடந்த 14.08.2025 அன்று புகார் அளித்தும் இதுநாள் வரை புகாரின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், 3 ம் வாதிக்கு தாவா சொத்தில் சட்டப்படி கிடைக்க வேண்டிய 1/4 ன்கீழ் பாகவீதத்தை பிரித்து தருவதற்கு இசைவு தெரிவித்திட அறிவுறுத்தப்பட்டு, 3 ம் வாதி தரப்பில் 1, 2 வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு கடந்த 07.01.2026 தேதியிட்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளதை கடந்த 09.01.2026 அன்ற பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும், அதன்பிறகு 1, 2 வாதிகள் தாவா சொத்தில் 3 ம் வாதிக்குரிய 1/4 பாகவீதத்தை பிரித்து தருவதற்கு சம்மதம் தெரிவித்து சமரசமாகிவிட்டதால் அவர்கள் இவ்வழக்கில் 1, 2 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், பிரதிவாதி தாவா சொத்தில் வாதிகளுக்குரிய பாகவீதத்தினை பிரித்து பாகபிரிவினை செய்வதற்கு ஒத்துழைப்பு தராமல் தொடர்ந்து பிரச்சினை செய்து வருவதால் அவர் மட்டும் இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், எனவே பிரதிவாதி,

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:19:31 +0530

வாதிகளுக்குரிய 3/4 பாகவீதத்தினை பிரித்து தராமல் தொடர்ந்து அபகரிக்கும் நோக்கில் செயல்பட்டு வருவதால் வாதிகள் வேறுவழியின்றி பாகபிரிவினை பரிகாரம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டு வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

II. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கின் அடிப்படையில் பிரதிவாதிக்கு உரிய முறையில் நீதிமன்றம் மூலமாகவும், தபால் மூலமாகவும் அழைப்பாணை அனுப்பி பெற்றுக்கொண்ட பிரதிவாதி நீதிமன்றம் ஆஜராகாததால் பிரதிவாதி 24.03.2026 தேதியில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள்.

III. **இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

வாதிகள் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?

IV. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

V. **பிரச்சினைக்கான தீர்வு**

1) வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கை நிரூபிக்கும் விதமாக 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 நீதிமன்றத்தில் அளித்துள்ள முதல் விசாரணையில் வழக்குரையில் உள்ளவாறு குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். வாதிகள் தன்னுடைய வழக்கிற்கு ஆதாரமாக 17.05.1977 தேதியிட்ட கிரைய ஆவணம் நகல் வா.சா.ஆ.1 ஆவணமாகவும், 25.06.2019 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்று நகல் வா.சா.ஆ.2 ஆவணமாகவும்,

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:19:38 +0530

31.08.2025 தேதியிட்ட கூட்டுப்பட்டா எண்.2484 இணையதள நகல் வா.சா.ஆ.3 ஆவணமாகவும், 31.08.2025 தேதியிட்ட புல எண்.206/8 ஏக்குரிய வரைபடம் இணையதள நகல் வா.சா.ஆ.4 ஆவணமாகவும், 31.08.2025 தேதியிட்ட புல எண்.206/8 பி1 க்குரிய வரைபடம் இணையதள நகல் வா.சா.ஆ.5 ஆவணமாகவும், 31.08.2025 தேதியிட்ட புல எண்.206/8 பி2 க்குரிய வரைபடம் இணையதள நகல் வா.சா.ஆ.6 ஆவணமாகவும், 15.04.2025 தேதியிட்ட பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.7 ஆவணமாகவும், 07.01.2026 தேதியிட்ட 3 ம் வாதி தரப்பு பதிவு அறிவிப்பு (3 ரசீதுகள்) அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆவணமாகவும், 09.01.2026 தேதியிட்ட வாதி பதில் அறிவிப்பை பெற்ற ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.9 ஆவணமாகவும், வாதிகளின் ஆதார் அட்டைகள் எண்ணிக்கை 3 நகல் வா.சா.ஆ.10 ஆவணமாகவும், 11.02.2020 தேதியிட்ட 2 ம் வாதியின் தபால் நிலவர அறிக்கை ரசீதுடன் கூடியது அசல் வா.சா.ஆ.11 ஆவணமாகவும், 11..02.2020 தேியிட்ட பிரதிவாதியின் தபால் நிலவர அறிக்கை ரசீதுடன் கூடியது அசல் வா.சா.ஆ.12 ஆவணமாகவும், தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு இணையதள நகல் வா.சா.ஆ.13 ஆவணமாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2) வா.சா.1 ன் சாட்சியத்தையும், வாதி தரப்பு சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, 2, 3 வாதிகள் மற்றும் பிரதிவாதியின் தகப்பனாரும், 1 ம் வாதியின் கணவருமான காலஞ்சென்ற ராஜமாணிக்கம் என்பவருக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதும், வாதிகள் மற்றும் பிரதிவாதி ஆகிய நால்வரையும் வாரிசாக விட்டுவிட்டு, எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இராஜமாணிக்கம் இறந்துவிட்டார் என்பதும், தாவா சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்பதும், மேற்படி

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:19:43 +0530

காலஞ்சென்ற இராஜமாணிக்கத்திற்கு வாதிகள் மற்றும் பிரதிவாதி வாரிசுகள் என்பதும், தாவா சொத்துக்கள் நாளது தேதி வரை வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு இடையில் பிரிவினை செய்து கொள்ளாமல் பொதுவில் இருந்து வருகிறது என்பதும் தெரியவருகிறது. பிரதிவாதி தாவா சொத்தை பாகபிரிவினை செய்து கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று வாதி தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

3) வாதிகளின் வழக்கு தவறு என்றோ, வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவறு என்றோ, தாவா சொத்துக்கள் பாகபிரிவினை ஆகிவிட்டது என்றோ வாதிகளின் வழக்கை மறுத்து பிரதிவாதி நீதிமன்றம் ஆஜராகி ஆவண சாட்சியங்கள் மூலமும், வாய்மொழி சாட்சியங்கள் மூலமும் நிரூபணம் செய்யாததால் வாதிகளின் வழக்கை பிரதிவாதி எதிர்கொள்ளவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தாவா சொத்தில் வாதிகளுக்குரிய 3/4 வீதம் பாகவீதம் உள்ளது என்று விளம்புகை செய்தும், தாவா சொத்துக்களில் முதல்நிலை தீர்ப்பாணை வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணையும் கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து வாதிகளின் வழக்கை அனுமதித்து உத்தரவிப்படுகிறது.

## V. முடிவில்

1. **வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **வாதிகள் வழக்கில் கோரியுள்ளவாறு, தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 3/4 பாகவீதம் பெற வாதிகள் உரிமையுடையவர்கள்**

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.02 14:19:51 +0530

**என்று விளம்புகை செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.**

3. **வாதிகள் முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை பெற உரிமையுடையவர்கள் என்று உத்தரவிடப்படுகிறது.**
4. **வாதிகளுக்கு, பிரதிவாதி வழக்கின் செலவுத் தொகையை கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து- தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் பதிவெடுத்து பிழைநீக்கம் செய்து 2026 ம் ஆண்டு ஜூலை மாதம், 02 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.02 14:19:57 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 திருமதி. மீனாட்சி (1ம் வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.05.1977 | கிரைய ஆவணம் | (சான்று நகல்) |
| வா.சா.ஆ.2 | 25.06.2019 | கிரைய ஆவணம் | (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.3 | 31.08.2025 | கூட்டுப்பட்டா எண்.2484 | (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.4 | 31.08.2025 | புல எண்.206/8 ஏக்குரிய வரைபடம் | (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.5 | 31.08.2025 | புல எண்.206/8 பி1 க்குரிய வரைபடம் | (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.6 | 31.08.2025 | புல எண்.206/8 பி2 க்குரிய வரைபடம் | (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.7 | 15.04.2025 | பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு | (அசல்) |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | 07.01.2026 | 3 ம் வாதி தரப்பு பதிவு அறிவிப்பு (3 ரசீதுகள்) | (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.9 | 09.01.2026 | வாதி பதில் அறிவிப்பை பெற்ற ஒப்புதல் அட்டை | (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.10 | -- | வாதிகளின் ஆதார் அட்டைகள் எண்ணிக்கை 3 | (நகல்) |
| வா.சா.ஆ.11 | 11.02.2020 | 2 ம் வாதியின் தபால் நிலவர அறிக்கை ரசீதுடன் கூடியது | (அசல்) |
| வா.சா.ஆ.12 | 11..02.2020 | பிரதிவாதியின் தபால் நிலவர அறிக்கை ரசீதுடன் கூடியது | (அசல்) |
| வா.சா.ஆ.13 | | தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு | (இணையதள நகல்) |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** : இல்லை.

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.02 14:20:04 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair **தீர்ப்புரை**

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண்.33/2026**

நாள் : 02.07.2026